ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2393/11 - 2024 ජූලි මස 15 වැනි සඳුදා - 2024.07.15

*2393/11 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 5/2021*

**2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம்**

*2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 48 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின்கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கஞ்சன விஜேசேகர,**
மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்.

கொழும்பு,
*2024, யூலை 15.*

**ஒழுங்குவிதிகள்**

இவ்வொழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் (கூட்டாய்வு உடன்படிக்கைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை, இலங்கையின் பெற்றோலிய வளங்களை தேடிக்கண்டறிதல் அபிவிருத்தித் துண்டு நிலப்படத்துக்கு இணங்க, அதிகார சபையினால் (இதனகத்துப் பின்னர் "பெயர் குறிக்கப்பட்ட துண்டம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டாய்வுகளுக்காக வரையறுத்துக் கூறப்பட்ட மற்றும் எல்லை வரையறுக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெயர் குறிக்கப்பட்ட இடப்பரப்புகளினுள், அதிகார சபையுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டாய்வுகளில் ஈடுபடுவதற்கும் அவற்றை நிறைவேற்றுவதற்கும் விரும்புகின்ற எவரேனும் ஆளிடமிருந்து (இதனகத்துப்பின்னர் "அக்கறை முன்மொழிவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அக்கறை பற்றிய வெளிப்படுத்தலைக் கோரலாம்.

1A - PG 6766 — 354 (2024/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டங்களினுள் அதிகார சபையுடன் கூட்டாய்வொன்றில் ஈடுபடுவதற்கும் அதனை நிறைவேற்றுவதற்கும் விரும்புகின்ற எவரேனும் ஆள், நிருவாகக் கட்டணமாக நூறு ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (100 ஐஅடொ) கொடுப்பனவுடன் சேர்த்து, இதற்கான அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் அவரது அக்கறை முன்மொழிவை (இவ்வொழுங்குவிதிகளில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

4. மூன்றாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட அக்கறை முன்மொழிவு பின்வரும் தகவல்களை உள்ளடக்குதல் வேண்டும் :

(அ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டங்களுக்காக அதிகார சபையுடன் கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டிய கூட்டாய்வின் முன்மொழியப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டம் ;

(ஆ) எந்தக் கூட்டாய்வுக்கு அக்கறை முன்மொழிவு சமர்ப்பிக்கப்படுகின்றதோ அல்லது சமர்ப்பிக்கப்படவுள்ளதோ அந்தக் கூட்டாய்வை நிறைவுசெய்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட காலவரையறை ;

(இ) (ஆவணச் சான்றினால் ஆதாரப்படுத்தப்பட்ட) ஒத்த ஆய்வுகளைக் கையாள்வதிலான கடந்தகால அனுபவம் ;

(ஈ) (ஆவணச் சான்றினால் ஆதாரப்படுத்தப்பட்ட) கூட்டாய்வை மேற்கொள்வதற்கான நிதிசார் ஆற்றல் ;

(உ) அதிகார சபையுடனான கூட்டாய்வுக்காக தெரிவுசெய்யப்பட வேண்டிய பெயர்குறிக்கப்பட்ட துண்டம் ;

(ஊ) கூட்டாய்வுக்குத் தேவைப்படுத்தப்பட்ட முக்கிய பணிகளைப் புரிவதற்கு ஆற்றலுடைய அனுபவம் வாய்ந்த ஆளணியினரைக் கொண்டிருப்பதற்கான எண்பிப்பு ; அத்துடன்

(எ) கூட்டாய்வின் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான சாதனங்கள் மற்றும் வளங்களைக் கொண்டிருப்பதற்கான எண்பிப்பு.

5. இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழ் அக்கறை முன்மொழிவொன்றைப் பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு அக்கறை முன்மொழிவையும் மதிப்பீடு செய்வதற்காக பின்வரும் ஆட்கள் அடங்கிய (இவ்வொழுங்குவிதிகளில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றுக்கு அத்தகைய எல்லா அக்கறை முன்மொழிவுகளையும் ஆற்றுப்படுத்துதல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர்கள் சபையிலிருந்தான ஆள் ஒருவர், அவர் அக்குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) எண்ணெய் தேடிக்கண்டறிதல் பற்றிய ஒத்த ஆய்வுகளைக் கையாள்வதில் அறிவுடையவராகவுள்ள அதிகார சபையின் பணியாட்டொகுதியிலிருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவர் ;

(இ) சிரேட்ட உதவிச் செயலாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள வலுசக்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர் ;

(ஈ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள பொதுத் திறைசேரியின் பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் அல்லது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(உ) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் ஒருவர்.

6. ஐந்தாம் ஒழுங்குவிதியின் கீழ் குழுவுக்கான அக்கறை முன்மொழிவைப் பெற்றதன்மேல், குழுவானது அதன் அறிக்கையை ஒரு மாத காலப்பகுதியொன்றினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதி, குழுவின் கண்டுபிடிப்புகள் மற்றும் விதப்புரைகள் மீதான அவரது அவதானங்களுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையை சபை கவனத்திற்கொள்வதற்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.

7. (1) ஆறாம் ஒழுங்குவிதியின் கீழ் அறிக்கை மற்றும் விதப்புரைகளைப் பெற்றதன்மேல், சபையானது-

(அ) குழுவின் கண்டுபிடிப்புகள் மற்றும் விதப்புரைகள் அத்துடன் பணிப்பாளர் தலைமையதிபதியின் அவதானங்களுடன் அது திருப்திப்படின், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு அங்கீகாரம் வழங்கலாம் ;

(ஆ) விண்ணப்பதாரர்களின் மேலதிக அம்சங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என அது அபிப்பிராயப்படின், அத்தகைய இடப்பரப்புக்களை மீளக் கவனத்திற்கொள்ளுமாறும் குழுவின் கண்டுபிடிப்புகள் மற்றும் விதப்புரைகளுடன் சேர்த்து மதிப்பீட்டு அறிக்கையை மீளச் சமர்ப்பிக்குமாறும் குழுவைக் கோரலாம் ; அல்லது

(இ) குழுவின் கண்டுபிடிப்புகள் அதிகார சபையின் தேவைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை என அது அபிப்பிராயப்படின், அதற்காக குறித்தளிக்கப்பட்ட காரணங்களுடன் மதிப்பீட்டு அறிக்கையை முழுமையாக அல்லது பகுதியளவில் நிராகரிக்கலாம்.

(2) குழுவின் விதப்புரையின் மீது சபையின் உறுப்பினர்களுக்கிடையே உடன்பாடின்மையிருப்பின், சபையின் பெரும்பான்மை முடிபு மேலோங்குதல் வேண்டும்.

8. ஏழாம் ஒழுங்குவிதியின் கீழான சபையின் அதிகாரத்தின்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, வரைவு கூட்டாய்வு உடன்படிக்கையை இறுதியாக்குவதற்காக, 9 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகள் உட்பட கூட்டாய்வுக்காக குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டத்துக்கு விசேடமாக ஏற்புடையற்பாலதான நியதிநிபந்தனைகளின் மீது (இதனகத்துப் பின்னர் "குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இயைபான பெயர் குறிக்கப்பட்ட துண்டத்துக்காக (இதனகத்துப்பின்னர் "கூட்டாய்வுப் பங்காளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தெரிவுசெய்யப்பட்ட ஆளுடன் கலந்துரையாடல்களைத் தொடங்குதல் வேண்டும்.

9. (1) ஆயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர் (1000 ஐஅடொ) கூட்டாய்வு உரிமக்கட்டணம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திலான கூட்டாய்வு உரிமக் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) சதுர கிலோமீற்றர் அலகொன்றிற்கு இருபது ஐக்கிய அமெரிக்க டொலர் (20 ஐஅடொ) என்ற வீதத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திலான வீதத்தில் குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டத்தின் முழு சதுர இடப்பரப்புக்கு வருடாந்த கட்டாய நில வாடகைக் கொடுப்பனவு செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) பெற்றோலியத் தரவுகளை அணுகுவதற்கு அனுமதிப்பதற்கு ஏற்புடையற்பாலதானவாறான உரிமக்கட்டணம் 2024, மாச்சு 5 ஆந் திகதிய 2374/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் (தரவுகளுக்கு உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

10. குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டத்துக்கான கூட்டாய்வு உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு முன்னர் ஐக்கிய அமெரிக்க டொலர் நாணயத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் கூட்டாய்வுப் பங்காளரினால் செய்யப்பட்ட கொடுப்பனவின் மேல், கூட்டாய்வுப் பங்காளருக்கு அத்தகைய பெற்றோலியத் தரவை வழங்குவது அதிகார சபையின் கடமையாதல் வேண்டும்.

11. கேள்வியின் கீழுள்ள ஒரே பெயர்குறிக்கப்பட்ட துண்டம் கிடைக்கக்கூடியதாகவுள்ள காலப்பகுதியொன்றினுள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் அவ்வொரே "பெயர்குறிக்கப்பட்ட துண்டத்தில்" அக்கறை கொண்டுள்ளவிடத்து, அதிகாரசபை, இயைபான கூட்டாய்வுப் பங்காளரைத் தொடர்புகொண்டு அவர்களின் தனிப்பட்ட அக்கறை முன்மொழிவுகளைத் தனியொரு கூட்டு அக்கறை முன்மொழிவாக ஒன்றுதிரட்டும்படி அவர்களைக் கோரலாம்.

12. ஒரே பெயர்குறிக்கப்பட்ட துண்டத்தின் மீது பரஸ்பர உடன்படிக்கையொன்று எய்துவதற்கு கூட்டாய்வுப் பங்காளருக்கு இயலாதவிடத்து, அதிகாரசபை, மிகவும் பொருத்தமான கூட்டாய்வுப் பங்காளருக்கு கூட்டாய்வுக்கான இயைபான பெயர்குறிக்கப்பட்ட துண்டத்தை குறித்தளிப்பதற்கான முடிபை எடுக்கலாம். முன்மொழியப்பட்ட வேலையின் நோக்கெல்லைகள் மற்றும் வேறு எவையேனும் முக்கிய காரணிகளை கவனத்துட்கொண்டதன் பின்னர் எடுக்கப்பட வேண்டிய அதிகார சபையின் முடிபு இறுதியானதாகவும் முடிவானதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*13. (1) எட்டாம் ஒழுங்குவிதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டத்துக்கான பொருத்தமான கூட்டாய்வுப் பங்காளரைத் தெரிவுசெய்வதன் மேல், சபையானது, இயைபான வரைவு கூட்டாய்வு உடன்படிக்கையை அமைச்சர் கவனத்துட்கொள்வற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(2) அமைச்சர், கூட்டாய்வு உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளுடன் திருப்திப்படுவதன்மேல், கூட்டாய்வு உடன்படிக்கையை செய்துகொள்வதற்கான அங்கீகாரத்தை வழங்குதல் வேண்டும்.*

*14. குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டமொன்றுக்கான கூட்டாய்வொன்று, முன்மொழியப்பட்ட வேலையின் நோக்கெல்லைக்கு ஏற்புடையவாறு துளையிடுதல், நிலஞ்சார் தொழில்நுட்ப, சூழல்சார், உள்நாட்டு உள்ளீடு மற்றும் தரவுகளின் அந்தரங்கத் தன்மை உட்பட, ஏதேனும் விடயத்தில் கூட்டாய்வு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கு அமைந்தததால் வேண்டும். அதிகார சபையானது, கூட்டாய்வு பங்காளருக்கான முன்னறிவித்தலுடன் 4ட்டாய்வு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளை திருத்தலாம்.*

*15. கூட்டாய்வு உடன்படிக்கைக்கு இணங்க குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டத்தில் வேலை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டவுடன் -*

*(அ) கூட்டாய்வு உடன்படிக்கையால் மேவப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டத்தின் ஏதேனும் பாகத்தினுள் வர்த்தக ரீதியில் ஒப்பேறக்கூடிய நீரகக் கரியப் படிமங்கள் உள்ளதெனக் கூட்டாய்வுப் பங்காளர் கண்டுபிடித்தால், கூட்டாய்வுப் பங்காளர், அதிகார சபைக்கான எழுத்திலான அறிவித்தல் மூலம், கூட்டாய்வுக்கான குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டம் தொடர்பில் கூட்டாய்வு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, பெற்றோலிய வள உடன்படிக்கையொன்றின் மீது புறநீங்கலான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும்படி கோருதல் வேண்டும் ; அத்துடன்*

*(ஆ) கூட்டாய்வு உடன்படிக்கையின் கீழ் மேவப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டத்தினுள் வேறு ஏதேனும் வலுசக்தி வாய்ப்பு வளத்தை அல்லது கனிப்பொருள் வாய்ப்பு வளத்தைக் கூட்டாய்வுப் பங்காளர் கண்டுபிடித்தால், கூட்டாய்வுப் பங்காளர், எழுத்திலான அறிவித்தலொன்றின் மூலம், அத்தகைய கண்டுபிடிப்புகள் பற்றி அதிகார சபைக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அதிகார சபையானது அத்தகைய கண்டுபிடிப்புகள் பற்றி இயைபான ஒழுங்குபடுத்தும் உருவகத்துக்கு அறிவித்தலும் வேண்டும். இயைபான ஒழுங்குபடுத்தும் உருவகம், அத்தகைய வலுசக்தி வாய்ப்பு வளம் அல்லது கனிப்பொருள் வாய்ப்பு வளத்தைப் பற்றிய அதன் முடிபை சுயாதீனமாக எடுத்தல் வேண்டுமென்பதுடன் அம்முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.*

*16. (1) அதிகார சபையும் கூட்டாய்வுப் பங்காளரும், கூட்டாய்வு உடன்படிக்கை வலுவிலுள்ள காலப்பகுதியினுள் கூட்டாய்வுக்காக குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டத்துக்கு ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்வதற்கு முயற்சித்தல் வேண்டும்.*

*(2) அதிகார சபையும் கூட்டாய்வுப் பங்காளரும் 15 ஆம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியின் கீழான உடன்படிக்கையொன்றுக்கு வரத்தவறுகின்றவிடத்து, அதிகார சபையானது, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட துண்டம் எல்லாவற்றுக்காகவும் அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்காக உள்நாட்டில் அல்லது சர்வதேச ரீதியில் முதலீட்டு முன்மொழிவுகளைக் கோரலாம்.*

*17. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-*

*“இலங்கையின் பெற்றோலிய வளங்களைத் தேடிக்கண்டறிதல் மற்றும் அபிவிருத்தித் துண்ட நிலப்படம்” என்பது, நீரகக்கரியங்களைத் தேடிக்கண்டறியும், அபிவிருத்தி செய்யும் மற்றும் தயாரிக்கும் நோக்கங்களுக்காக இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையினால் எல்லை வரையறுக்கப்பட்ட இடப்பரப்புகளை விவரிக்கின்றதும் காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்பட்டதுமான நிலப்படம் எனப் பொருள்படும் ; ஒரு வரையறுத்துக்கூறப்பட்ட இடப்பரப்பின் வலுசக்தி வாய்ப்பு வளத்தை ஆய்வுசெய்யும் மற்றும் மதிப்பீடு செய்யும் குறிக்கோளுடன், அரசுக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கும் அல்லது சேவை வழங்குநர்களுக்கும் அல்லது அறிவியற்சார் நிறுவனங்களுக்கும் இடையே நடாத்தப்பட்ட நீரகக்கரிய தேடிக்கண்டறிகை மற்றும் வேறு ஒன்றிணைந்த வலுசக்திக் கருத்திட்டங்களை மேவுகின்ற உடன்படிக்கைககள் எந்த இடப்பரப்புகளில் செய்துகொள்ளப்பட்டனவோ அந்த இடப்பரப்புகளை எல்லை வரையறுப்பதற்கான மூலமாக இது பயன்படுத்தப்படுதல் வேண்டும் ;*

*“கூட்டாய்வு உடன்படிக்கை” என்பது, 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;*

"கூட்டாய்வுப் பங்காளர்" என்பது, கூட்டாய்வொன்றுக்காக வரையறுத்துக்கூறப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்பொன்றுக்கான கூட்டாய்வொன்றை மேற்கொள்வதற்கு அதிகார சபையுடன் இணைவதற்கு விரும்புகின்ற எவரேனும் ஆளிடமிருந்து பகிரங்க அறிவித்தலினூடாக அக்கறை முன்மொழிவுகளைக் கோருவதன் மூலம் 1 தொடக்கம் 6 வரையான ஒழுங்குவிதிகளில் விவரிக்கப்பட்டவாறான தெரிவுச் செயன்முறையைத் தொடர்ந்து அதிகார சபையினால் தெரிவுசெய்யப்படும் ஆள் எனப்பொருள்படும் ; அத்துடன்

"பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை" என்பது, 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

18. 2023, சனவரி 5 ஆந் திகதிய 2313/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் (கூட்டாய்வு உடன்படிக்கைகள்) ஒழுங்குவிதிகள், அவ்வொழுங்குவிதிகளின் கீழ் உரிய முறையில் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

(ஒழுங்குவிதி 3)

**அட்டவணை**

| கூட்டாய்வு அல்லது கூட்டாய்வுகளுக்கான அக்கறை முன்மொழிவு |
|---|
| 1.1 கூட்டாய்வு உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கான முறைமையியல், தொழில்நுட்பம் மற்றும் வேலைத்திட்டம் பற்றிய விபரம் |
| கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனம் (JSPR), ஆய்வை மேற்கொள்வதற்கான முறைமையியல், தொழில்நுட்பம் மற்றும் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டம் பற்றிய விபரங்களை வழங்குதல் வேண்டும். முன்மொழியப்பட்ட எவையேனும் உரிமையாண்மை முறைமைகளின் நன்மை விளக்கப்படுதல் வேண்டும். |
| 1.2 குறைந்தபட்ச வேலை நிகழ்ச்சித்திட்டம் |
| 1.2.1 மதிப்பிடப்பட்ட நேரடி செலவினம் |
| கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனமானது பின்வருமாறு விபரிக்கப்பட்டவாறு அக்கறை கொண்ட ஒவ்வொரு துண்டம்/இடப்பரப்புக்கான குறைந்தபட்ச வேலைத்திட்டமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | தொகை/செலவு | |
|---|---|---|
| | அலகு | ஐஅடொ ($) |
| உ+ம் (1) SEISMIC ஆய்வுகள்<br>(அ) 3-D (API) சதுர கி. மீ. இல்<br>(ஆ) 2-D (API) லைன் கி. மீ. இல் | | |
| | | |
| மொத்த மதிப்பிடப்பட்ட நேரடி செலவினம் | | |

| 1.2.2 நேரடியல்லாத செலவினம் |
|---|
| கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனமானது, தேவைப்படுத்தப்பட்டவாறு கட்டங்கள் அல்லது எதிர்பாராச் செலவுகளை அறிமுகப்படுத்தி, இவ்வுடன்படிக்கையின் நியதிகளின்கீழ் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட வேறு கூட்டுச் செயற்பாடுகளின் அல்லது வாய்ப்புக்களின் செலவையும்/நன்மையையும் விபரிக்கலாம். கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனமானது அக்கறை கொண்ட ஒவ்வொரு துண்டம்/ இடப்பரப்புக்குக் கீழேயுள்ள வடிவத்தில் அத்தகைய விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | தொகை/செலவு | |
|---|---|---|
| | அலகு | ஐஅடொ ($) |
| ....................................................................... | | |
| மொத்த மதிப்பிடப்பட்ட நேரடி செலவினம் | | |

*1.3 செயற்பாட்டு (வேலை) அட்டவணை*

*1.3.1 கருத்திட்ட நேர எல்லை*

| செயற்பாட்டு வேலை | நேர எல்லை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

*1.3.2 அறிக்கைகளை பூர்த்திசெய்தலும் சமர்ப்பித்தலும்*

| அறிக்கைகள் | திகதிகள்/மைல்கற்கள் |
|---|---|
| 1. இடைக்கால முன்னேற்ற அறிக்கைகள் (பயனுறும் திகதியிலிருந்து 1 வருடம்) | |
| 2. தேவைப்படுத்தப்பட்டவாறு மேலதிக இடைக்கால முன்னேற்ற அறிக்கைகள் | |
| 3. வரைவு இறுதி அறிக்கை (பயனுறும் திகதியிலிருந்து 27 மாதங்களினுள்) | |
| 4. இறுதி அறிக்கை (பயனுறும் திகதியிலிருந்து 36 மாதங்களினுள்) | |
| 5. ஏனையவை* | |

* கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனங்கள் தமக்குத் தெரிந்தவாறு கூட்டாய்விலிருந்து ஒப்படைக்கப்படத்தக்கவற்றின் வேறு எவையேனும் வடிவங்களை விவரித்தல் வேண்டும்.

*1.4 ஒத்த சூழல்களில் அல்லது கருத்திட்டங்களில் கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனத்தின் முன்னைய அனுபவம்*

*அவசியமாகின்றவாறு ஆதாரப்படுத்தும் சான்றை விவரித்து வழங்கவும்.*

*1.5 கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனங்களின் குறிப்பீடுகள்*

*1.5.1 கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை ஒழுங்கமைப்பு/நிறுவனம் பற்றிய விவரணம்*

*பின்வருபவை, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனத்தின் தன்மைக்கு அமைய கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனங்களிலிருந்து தேவைப்படுத்தப்பட்ட வழமையான தகவல்களாகும். எவையேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனிகளின் விடயத்தில், (இ), (உ), (ஊ), (ஓ), (ஔ), (க), (ங), (ச) மற்றும் (ஞ) ஆகியவற்றைச் சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதில்லை. கூட்டிணைவு ஒன்றின் விடயத்தில், கூட்டிணைவின் ஒவ்வொரு உறுப்பினரும் இத்தகவலை தனிவேறாக வழங்குதல் வேண்டும்.*

| | *அளவுருக்கள்* | *தேவைப்படும் தகவல்கள்* |
|---|---|---|
| (அ) | கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனதின் சட்டப்பெயர் | |
| (ஆ) | கூட்டிணைவொன்றின் விடயத்தில், கூட்டிணைவின் தலைமை உறுப்பினரின் சட்டப்பெயர் | |
| (இ) | கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட இடம் (பதிவுச் சான்றிதழ் மற்றும் ஏற்புடையதானவாறு அமைப்பகவிதிகள் மற்றும் அமைப்புப் புறவிதிகளின் பிரதியொன்றை சமர்ப்பிக்கவும்) | நகரம் |
| | | மாநிமல் |
| | | நாடு |
| | | ஆண்டு |
| | | அஞ்சல் குறியீடு |
| (ஈ) | முன்மொழிவுக்கான கோரிக்கை பற்றிய தொடர்பாடலுக்கு கம்பெனியின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட தலைவர் அல்லது கூட்டிணைவு | பெயர் |
| | | பதவிப்பெயர் |
| | | முகவரி |
| | | தொலைபேசி இல. |
| | | மின்னஞ்சல் |
| (உ) | தவிசாளர் மற்றும் பணிப்பாளர்கள் சபையின் பெயர் மற்றும் முகவரி | பெயர் |
| | | முகவரி |
| | | தொலைபேசி இல. |
| | | மின்னஞ்சல் |
| (ஊ) | பிரதான நிறைவேற்று அலுவலரின் பெயர் மற்றும் முகவரி | பெயர் |
| | | முகவரி |
| | | தொலைபேசி இல. |
| | | மின்னஞ்சல் |
| (எ) | இணைக்கம்பெனிகள்/தாய்க் கம்பெனி பற்றிய தகவல் உட்பட கூட்டாய்வு முன்மொழிவு அறிக்கை நிறுவனம் எந்தத் தொகுதியைச் சேர்ந்ததோ அந்தத் தொகுதி ஏதேனும் இருப்பின் அதன் கட்டமைப்பு மற்றும் விபரம் | |
| (ஏ) | கம்பெனியின் வியாபாரச் செயற்பாடுகள் | |
| (ஐ) | தாய்க்கம்பெனியின் பெயர் (கள்) மற்றும் முகவரி (ஏற்புடையதாகின்றவிடத்து) | பெயர் |
| | | முகவரி |
| | | தொலைபேசி இல. |
| | | மின்னஞ்சல் |

| | *அளவுருக்கள்* | *தேவைப்படும் தகவல்கள்* |
|---|---|---|
| (ஒ) | பெற்றோலியத்தைத் தேடிக்கண்டறிதல் மற்றும் தயாரிப்புச் செயற்பாடு கூட்டிணைவின் தலைமை உறுப்பினரின் அமைப்பகவிதிகள் மற்றும் அமைப்புப் புறவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? | ஆம்/இல்லை |
| (ஓ) | ஏற்புடையதாகின்றவாறு, கடந்த மூன்று ஆண்டுகளுக்கான ஐந்தொகையின் பாகமாக அமைகின்ற குறிப்புகள் பற்றிய அட்டவணையுடன் சேர்த்து கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகைகள் மற்றும் இலாப, நட்ட கூற்றுக்கள் உட்பட ஆண்டறிக்கையை அங்கிலமொழியில் சமர்ப்பிக்கவும். | கீழே உள்ள (1.5.2) என்னும் பிரிவைப் பார்க்கவும் |
| (ஔ) | கம்பெனியின் கூட்டிணைக்கப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை | |
| (க) | கம்பெனி அல்லது கூட்டிணைவு உறுப்பினர்கள் அல்லது கடந்த 10 ஆண்டுகளில் விலை கூறுபவர் எந்தக் கம்பெனிகளின் தொகுதியைச் சேர்ந்தவராக உள்ளாரோ அந்தக் கம்பெனிகளின் தொகுதியின் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினருக்கு எதிராக அளிக்கப்பட்ட தீர்ப்புக்கள்/ நடுத்தீர்ப்பு அளிப்புக்கள் பற்றிய விபரங்கள். வழக்கின் தன்மையைக் குறித்துரைக்கவும். | |
| (ங) | கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனம் முன்னர் இலங்கையில் பணிபுரிந்துள்ளாரா? ஆம் எனின், விபரங்களை வழங்கவும் | |
| (ச) | ஏற்புடையதாயின் சர்வதேச முகவராண்மைத் தரப்படுத்தல் | |
| (ஞ) | கம்பெனியின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சூழல் (HSE) கொள்ளை/ கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவனங்கள் விடயம் | |
| (ட) | கூட்டாய்வு முன்மொழிவாளர் அறிக்கை நிறுவன கூட்டிணைவு உடன்படிக்கை | ஆம்/இல்லை |
| (ண) | வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்புக் கம்பெனிகளின் விடயத்தில் முக்கிய பங்குவைத்திருப்பவர்களின் ஆளடையாளம். | 1.<br>2.<br>3. |

1.5.2 நிதிசார் ஆற்றல் பற்றிய எண்பிப்பு

குறைந்தபட்ச வேலை நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆற்றலை எடுத்துக்காட்டி நிதிசார் ஆற்றல் பற்றிய எண்பிப்பை இணைக்கவும். இது, முன்னைய 3 ஆண்டுகளுக்கான நிதித் தரவு, வங்கிகளிலிருந்தான நன்நிலைக் கடிதங்கள் அல்லது நிதி நிறுவனங்களிலிருந்தான நிபந்தனையுடனான நிதியளிப்புக் கடிதங்களுடன் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் வடிவத்தில் இருக்கலாம்.

**1.6 முக்கிய ஆளணியினரின் தோற்றுருவம்**

| *பெயர்* | *பதவி* | *வகிபங்கு பற்றிய விவரணம் (முன்மொழியப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில்)* |
|---|---|---|
| | | |

**1.7 அக்கறை முன்மொழிவை சமர்ப்பித்தல்**

கொடுப்பனவுடனான விண்ணப்பம், அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்புக்களின்படி dg@pdasl.gov.lk என்ற மின்னஞ்சலுக்கு அல்லது அஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை,
மட்டம் 6, செலிங்கோ மனை, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01,
இலங்கை.

EOG 07 - 0144